1979 நவம்பர் 9]

மேலும் தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 6) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 19/1979) ஆய்வு செய்யப்பெற்று பரிந்துரைகள் எதுமின்றி திருப்பி அனுப்பப் பெற்றுள்ளது என்றும் மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப் பெற்றுள்ளது.

(1) தகவல் கோரல்—தொடர்ச்சி.

(இ) ஒலிபெருக்கி அமைப்பு குறித்து.

திரு. மு. அம்பிகாபதி : பாயின்ட் ஆப் ஆர்டர். எங்கள் பக்கத்தில் மைக்கில் பேசுவது சிரமமாக இருக்கிறது. அங்கு நான்கு பேர்களுக்கு இரண்டு இருக்கின்றன, இங்கே நான்கு பேர்களுக்கு ஒன்றுதான் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அவைக்கு ஒரு கட்டபொம்ம னைப் போன்றவர் அம்பிகாபதி. குரலும் அப்படித்தான். உங்கள் குரல் அதிகமாகக் கேட்கிறது. குறையே இல்லை, அந்த ஒலிபெருக்கியே போதும்.

திரு. க. சுப்பு : வேறு எதை வேண்டுமானாலும் சொல்லுங்கள், கட்ட பொம்மனைக் கேவலப்படுத்தாதீர்கள்.

(ஈ) பெருமழையினால் நெல்லையில் ஏற்பட்டுள்ள விளைவு குறித்து.

திரு. பி. எச். பாண்டியன் : கடந்த மூன்று நாட்களாக பெருமழை காரணமாக சேரன்மாதேவி சட்டமன்றத் தொகுதி நெல்லையிலிருந்து துண்டிக்கப்பட்டிருக்கிறது. சாலைகள் பழுதடைந்திருக்கின்றன. குளங்கள் நிரம்பியிருக்கின்றன. தாமிரபாணியில் பெருவெள்ளம் வந்து ஊர் மக்களிடம் அது பீதியை கிளப்பியிருக்கிறது. ஆகவே, இந்த அரசு நிவாரணப் பணி களை உடனே எடுத்து அங்குள்ள மக்கள் நிவாரணம் பெறுவதற்கு நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இந்த நிலையைக் கவனத்தில் கொண்டு உடனடியாக அங்குள்ள மக்களுக்கு ஏதாவது வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துண்டிக்கப்பட்ட இடங்கள் எல்லாம் திருப்பி துண்டிப்பிலிருந்து சரி செய்யப்பட்டது என்று செய்தி வந்திருக்கிறது. மேலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலும் உடனடியாக பொது மக்களுக்கு

வேண்டிய நிவாரணப் பணிகளைச் செய்யவேண்டும் என்றும் இன்றிருக்கிற அரசாணையின்படி நிவாரணப் பணிகள் எவ்வளவு செய்யவேண்டுமோ அவ்வளவும் செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. நிவாரணப் பணி தீவிரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : நாளையோடு அவை முடிகிறது என்று கருதுகிறேன். கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் ஒன்றும் வரப்பெற வில்லை. நாளையாவது எடுத்துக்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் பேச்சிலேயே, நாளையோடு அவை முடிகிறது என்று கருதுகிறேன் என்று சொல்லியிருக்கிறீர்கள். நாளை அவை இருக்கிறது என்பதை நினைத்துக்கொள்ளுங்கள்.

(5) அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி.)

(9) நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, " நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 74/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்." என்று மொழிகிறேன்.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, தேவையான திருத்தங் களோடு இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதில் என்னுடைய பகுதிகள் மிகவும் பாதிக்கப்படும் என்பதால் தான் பேசுவதற்கு முன்வந்திருக் கிறேன். வழக்கமாக பேசவேண்டும் என்பதற்காக இதில் பேச முன்வர வில்லை. எனது தொகுதியில்தான் சாலி கிராமம், விருகம்பாக்கம் முதலிய கிராமங்கள் எல்லாம் வருகிறது. முக்கியமாக பெல்ட் ஏரியாவாக இருக்கின்ற பகுதிகள் எல்லாம் விவசாயப் பகுதிகளாக இருக்கின்றன. விவசாயம் தான் முக்கியமாக இருக்கிறது. இதையெல்லாம் ரெஸிடன்ஷியல் ஏரியா, நான்-ரெஸிடென்ஷியல் ஏரியா என்றெல்லாம் இருக்கின்ற வேறு பாட்டை நீக்கப்போகிறீர்கள். அதே நோக்கில் வரியையும் போடப்போகி றீர்கள். முன்னால் சிட்டியில் இருக்கின்ற பகுதிகளுக்கு இரண்டு கிரவுண்ட் என்றும், பெல்ட் ஏரியாவாக இருந்தால் மூன்று கிரவுண்ட் என்றும் கொண்டு

* 1979 நவம்பர் 6 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.